***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

\- - - - -

# *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 196 / 2019*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 5*** |
| ***Name*** | : | **திருமதி.கவிதாகாமாட்சி** |
| ***Father's / Husband's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***10.03.2025***

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது, C4 திலகர்திடல் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில், பெண் தலைமை காவலராகப் பணிபுரிந்து வருகீறேன். கடந்த 09.11.2014 ம் தேதி C3 SS காலனி சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் முதல் நிலை பெண் காவலராகப் பணிபுரிந்தேன். அன்றைய தினம், 19.00 மணிக்கு SS காலனி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட, நேருநகர், திருவள்ளுவர் நகர், கதவு எண். 9B என்ற விலாசத்தில், பெண்களை வைத்து, விபச்சாரம் நடப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சார்பு ஆய்வாளர் திரு.பூபதி, மற்றும் நான் WGr.I 3250, Gr.I 860 திரு.சசிகுமார், WGr-I 468 சுகன்யா, ஆகியோர் 19.15 மணிக்கு, நேருநகர் , திருவள்ளுவர் நகர், கதவு எண். 9B என்ற விலாசத்தில் போலிஸ் பார்ட்டியுடன் சென்றபோது, எதிரிகள் போலிஸ் பார்ட்டியைக் கண்டதும், ஓட எத்தனித்தவர்களை வளைத்துப் பிடித்து அந்த

இடத்தில் வைத்து, விசாரித்ததில், பின்னர் பெயர் விலாசம் தெரிந்த, மணிநகரத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் மகேஷ், மற்றும் சம்பட்டிபுரத்தைச் சேர்ந்த கண்ணனின் மனைவி முத்துமயில், ஆகிய இருவரும் பெண்களை வைத்து தான் குடியிருக்கும் குடியிருப்பில் வைத்து விபரச்சாரம் நடத்துவதாகக் கூறியதன் அடிப்படையில், இராஜபாளையத்தைச் சேர்ந்த முனிஸ்வரி மற்றும் சம்பட்டிபுரத்தைச் சேர்ந்த பார்வதி இரு பெண்களையும் ஆசை வார்த்தைகளைக் கூறி வறுமையின் அடிப்படையில் தாங்கள் இருவரும் அழைத்து வரும் வாடிக்கையார்களிடம் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில், உல்லாசமாக இருக்கும்படி வற்புறுத்தியிருப்பது விசாரணையில் தெரியவந்ததால், 20.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து, மகேஷ் மற்றும் முத்துமயில் இருவரையும் சார்பு ஆய்வாளர் பூபதி அவர்கள் எங்கள் முன்னிலையில் கைது செய்து, விசாரணை செய்ததில், பாதிக்கப்பட்ட பார்வதி மற்றும் முனீஸ்வரி மற்றும் எதிரிகள் ஆகியோரை 21.00 மணிக்கு காவல் நிலையம் அழைத்து வந்து, விசாரணை செய்தார்கள். விசாரணைக்கு நாங்கள் உறுதுணையாக இருந்து, சார்பு ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.1267/2016 பிரிவுகள் 4(i)(2), 5(i)(a), 5(i)(C), 5(i)(d) ITP Act மற்றும் 370 இதச உடன் இணைந்த பிரிவு 34 ஆகிய பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததைச் சொன்னேன்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**</u>

எதிரிகள் இருந்த இடம் மையப்பகுதியில், வீடுகள் உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றும் வீடுகள் நெருக்கமாக இருக்கும் பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கு பதிவு செய்தது முதல் கைது செய்தது வரை நான் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேனா என்றால் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த ஆஜர் படுத்தப்பட்ட போது, நான் escard ஆக இருந்தேன். எதிரிகள் இருந்த

வீட்டில், பாலியல் தொழிலுக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஆவணங்கள் எதுவும் கைப்பற்றினீர்களா என்றால் அது ஆய்வாளருக்குத் தான் தெரியும். பாதிக்கப்பட்டவர்களை மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துச் செல்லப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கானது, எங்கள் நிலையத்தில் வைத்து எதிரிகள் மீது பொய்யாக போடப் பட்ட வழக்கு என்றும், நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை